# பிரிவு – 1

## உண்மையின் உயர்வு

உண்மை என்பதற்கு உண்மை பேசுதல், வாக்குத் தவறாமை, சொல்லுறுதி சத்தியம், பொய் உரையாமை என பல பொருள்கள் கொள்ளலாம். இதை தான் ஔவையார்,

‘கற்பெனப்படுவது சொல் திறம்பாமை’ என்றார்.

உண்மை தான் கற்பு என்பது கருத்தாகும். தமிழ்ச் சங்கப் புலவரான நக்கீரர் நெற்றிக் காட்டினாலும் குற்றம் குற்றமே என உண்மையாக இறைவனிடம் வாதாடி வெற்றி பெறவில்லையா?

அரிச்சந்திரன் என்னும் அரசன் உண்மை தவறாது நாட்டை ஆண்டு வந்தான். ஆவனை பொய் சொல்லுவிப்பதற்காக விஸ்வாமித்திர முனிவர் எத்தனையோ சூழ்ச்சி செய்தார். இதனால் தன் நாடு, நகர், செல்வம், மனைவி, மகன் எல்லாவற்றையும் இழந்து, தன்னையும் இழந்து, மனைவியின் தலையை தானே துண்டிக்க வரும் நிலை வந்த போது உண்மையில் இருந்து சிறிதும் விலகவில்லை. இதனால் மனம் மகிழ்ந்த முனிவர் அரிச்சந்திரன் இழந்த அனைத்தையும் திரும்ப கொடுத்தார் என்பது கதை.

உண்மையின் உயர்வுக்கு இதை விட ஆதாரம் வேண்டுமா?

உலகெங்கும் வெற்றி பெறட்டும் உண்மை.

**நன்றி வணக்கம்**